1989 ஏப்ரல் 4]

களுடைய நலனை முன்னிட்டும், மாணவர்களுடைய நலனை முன்னிட்டும், அதுபோன்ற இடங்களுக்குச் சென்று அங்கேயிருக்கின்ற குறைகளை எழுதி அரசுக்கு அனுப்புவார்களானால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வழி ஏற்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவர்களுடைய விடுதிகள் பெரும்பாலும் தனியார் கட்டிடங்களில் உள்ளன. அந்தக்கட்டடங்களில் போதிய இடவசதி இல்லாத நெருக்கடியில் பாதகமான சூழ்நிலை உருவாகிறது. அந்த மாணவர்கள் தேர்வு பெறுவதில் கூட இயலாமல் தவறுவதற்கும் இது காரணமாக அமைகிறது. எனவே, அரசு பரிசீலித்து அனைத்துக் கட்டடங்களையும் அரசு கட்டடங்களாக உருவாக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசினுடைய நிதிநிலைமையையொட்டி பரிசீலனை செய்யப்படும்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே உள்ள பெரம்பூர் நெடுஞ்சாலையில் ஆதிதிராவிடர் அரசினர் கல்லூரி மாணவர்கள் விடுதி மிக மோசமான நிலையிலே இருக்கிறது. அதே நேரத்திலே, அதிலே தங்குவதற்குப் போதிய வசதியும் இல்லாமல் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அங்கே தங்கியிருக்கிறார்கள். அதை மாற்றியமைக்கக்கூடிய அல்லது புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா ? அப்படியென்றால் அதை என்னுடைய தொகுதியிலே கட்டித்தர ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய குறிப்புகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி எழுப்பலாம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதம் மாறிய ஆதி திராவிடர் மக்களுக்கு காலனி வீடுகள் கட்டித் தரப்படுமா ? முன்பு கட்டிய வீடுகளை அரசு செப்பனிட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புக்கத்துறை இராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம்.

29—(*வினா எண் 68) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு காலநடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், புக்கத்துறை கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனைக் கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடத்தை 1976 ஆம் ஆண்டில் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஒப்பந்தக்காரர்களிடம் வேலை ஒப்படைக்கப்பட்டது. 13 ஆண்டுகள் ஆகியும் அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படாத நிலை இருக்கிறது, அதற்கான காரணத்தை நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அங்கு செல்வாக்குப் படைத்த....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவரம் தெரிந்த உறுப்பினர் வினாவாகத் தொடுக்க வேண்டும். வினாவைக் கேளுங்கள், இருப்பதோ சில மணித் துளிகள்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, இந்தக் கட்டடம் கடந்த 13 ஆண்டுகளாக கட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று சொன்னால், அங்கே செல்வாக்கு படைத்தவர்கள் காண்டிராக்டராக இருப்பதால் அவர்களுடைய தவறான நடவடிக்கையின் காரணமாக அது கட்டப்படவில்லை என்று குறிப்புகள் இருக்கின்றன. இந்த நிலையில் தவறுக்கு காரணமான அந்த ஒப்பந்தக்காரர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்து, அந்தக் கால வரம்புக்குள் கட்டி முடிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கேள்வியிலேயே விடை இருக்கிறது. 13 ஆண்டுக்காலம்—இடையிலே ஓர் அரசுதான் இருந்தது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும் அதற்கும் சம்மந்தமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றிய.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா மட்டும்தான் No extension please (குறுக்கீடு) அமைச்சர் பதில் அளித்தால்கூட நீங்கள் வினா மட்டும் கேளுங்கள். நீங்கள் என்ன அமைச்சருக்குப் பதில் சொல்வது ?

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடத்தை அன்றைக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தவர் தன்னுடைய உறவினர் பெயரில் காண்டிராக்ட் எடுத்தார். அதற்குப் பிறகு அதை கட்டி முடிக்காமல் இருந்ததால் அவர்மீது அரசு நடவடிக்கை எடுத்தது. அப்படி

1989 ஏப்ரல் 4]

நடவடிக்கை எடுத்தும், சரியான நடவடிக்கை எடுத்தும். இன்றைக்கு இருக்கின்ற அந்த ஊராட்சி ஒன்றியமும் அதை முடிக்க நடவடிக்கை எடுக்காததால் அங்கு இருக்கின்ற மக்கள் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அரசு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்து, அந்தக் காலத்திற்குள் கட்டப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்காலத்திலே இருந்த அரசு நடவடிக்கை எடுத்தது என்றும், அப்படி நடவடிக்கை எடுத்தும் கூட அந்தக் கட்டடம் கட்டப்படவில்லை என்றும், இப்பொழுது இருக்கிற ஒன்றியம் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்றும் கேள்வி கேட்கிறபோது அதற்கும் அரசுக்கும் நேரடியாக சம்பந்தமில்லை என்றும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதே சம்பந்தமில்லாத நிலை இன்றைக்கும் உள்ளது. இருந்தாலும் கூட என்ன செய்யலாம் என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, கட்டதேவன்பட்டி தொட்டப்பநாயக்கனூரில் கால்நடை மருந்தகக் கட்டடம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அது நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் கால்நடை மருந்தகம் அமைப்பதுபற்றி இங்கே கேள்வி எழுப்பியுள்ளார். கால்நடை மருந்தகங்களை அமைப்பதற்கு அரசு ஒரு சில நிபந்தனைகளை ஏற்கெனவே விதித்துள்ளது. ஒன்றியத்தில் முதல் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட ஆகும் செலவில், ஊராட்சி ஒன்றியம் தனது பங்குத் தொகையாக 25 சதவிகிதமும், அரசின் பங்குத் தொகையாக 75 சதவிகிதமும் அளிக்கப்பட்டு கட்டடம் கட்டப்படுகிறது. இரண்டாவது மருந்தகம் என்றால் அரசு மானியம் 50 விழுக்காடு அளிக்கும். அதுபோல ஊராட்சி ஒன்றியம் 50 விழுக்காடு செலுத்த வேண்டும். மூன்றாவது கால்நடை மருந்தகம் என்றால், அரசு 25 விழுக்காடு வழங்கும். ஊராட்சி ஒன்றியம் 75 விழுக்காடு பங்குத் தொகை செலுத்த வேண்டும். நான்காவது மருந்தகமாக இருந்தால் ஊராட்சி ஒன்றியமே முழுத் தொகையையும் கட்டடம் கட்ட செலுத்தவேண்டும். மற்றும் எட்டு கிலோ மீட்டர் சுற்றளவுக்கு உள்ளதாக எந்த கால்நடை மருத்துவ மருந்தகமோ அல்லது கிளை நிலையமோ, மருந்தகமோ இல்லாமல் இருக்க வேண்டும். அதுபோல கால்நடை மருந்தக நிரந்தர கட்டடம் கட்டும்வரை ஊராட்சி ஒன்றியமோ, சம்பந்தப்பட்ட ஊராட்சியோ தாங்கள் இலவசமாக கட்டடம்

வழங்க வேண்டுமென்று நிபந்தனை இருக்கிறது. ஆகவே இந்த நிபந்தனைகளை எல்லாம் பின்பற்றி ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் போட்டு, தீர்மானத்தை அரசுக்கு உரிய கருத்துருவாக அனுப்பினால் அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

(முற்பகல் 9—50)

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக கிராமங்களில் கால்நடை மருந்தகங்களைக் கட்டும்போது, 10, 15 கிராமங்களுக்குச் சேர்த்து ஒரு கால்நடை மருந்தகம் கட்டித் தரப்படுகிறது. சில சமயங்களில் கால்நடைகளுக்கு எழுந்து நடக்க முடியாத அளவுக்கு நோய் வரும்போது, அந்தக் கால்நடைகளை நடத்திச் செல்ல முடியாமல் இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட நோய்களைத் தீர்க்க நடமாடும் கால்நடை மருந்தகங்களை அமைத்துத் தந்தால் பயனுள்ளதாக இருக்கும். அப்படிப்பட்ட முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இயங்கும் கால்நடை மருந்தகம் என்ற பிரிவு ஒவ்வொரு கோட்டத்திலும் ஒன்று செயல்படுகிறது. அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவது என்பது தற்போதைய நிலையில் நிதி ஆதாரம் இல்லாததால், அதை செயற்படுத்த முடியாமல் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு கால்நடைச் செல்வங்களை அபிவிருத்தி செய்வதும், பாதுகாப்பதும் மிகமிக அவசியமானது. இன்றைக்கு கால்நடை மருத்துவ மனைகள் அதிகமாக இல்லாததால் கால்நடைகள் இழப்புக்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே கால்நடை மருத்துவமனைகளை ஆரம்பிக்க 75, 50, 25 சதவிகிதம் ஊராட்சி ஒன்றியம் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை போடுவதற்குப் பதிலாக, எங்கே அவசியமோ அங்கே கால்நடை மருத்துவமனைகளை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல எங்கெங்கு கால்நடை மருத்துவமனைகள் அமைக்க வேண்டுமோ அங்கே அமைக்க இந்த அரசு ஆவலாக இருக்கிறது. இருந்தாலும், நிதி நிலைமை அதற்கு இடம் கொடுக்காததால், படிப்படியாக உறுப்பினர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 4]

திரு. எஸ். டேனியல் ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்களினுடைய கட்டடங்களைக் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதியிலிருந்து 50 சதவிகிதமும், அரசினுடைய மானியமாக 50 சதவிகிதமும் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். நிதியில்லாத ஊராட்சி ஒன்றியங்கள் 50 சதவிகிதம் கொடுக்க முடியாத காரணத்தால், கால்நடை மருந்தகங்களின் கட்டடங்களைக் கட்ட முழு மானியத்தையும் அரசே வழங்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவ்வாறு ஒன்றியப் பொது நிதியில் நிதி இல்லாதிருந்தால், அரசு அதனைப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. வெங்கடாசலம் : மாண்புமிகு தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்களுக்கென்று ஆண்டு ஒன்றுக்கு 10,000 ரூபாய் அளவிற்கு மருந்துகள்தான் வழங்கப்படுகின்றன என்று கால்நடை மருத்துவர்கள் குறை கூறுகிறார்கள். எனவே, மேலும் அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, தேவையான மருந்துகளைக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போல, கால்நடை மருந்தகங்களுக்கு 10,000 ரூபாய் மருந்துகள்தான் வழங்கப்படுகிறதென்பது தவறான கருத்தாகும். ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு 20,000 ரூபாய் மருந்துகள் வழங்கப்படுகின்றன. தற்போதைய நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டும், சிகிச்சைக்கு வருகிற கால்நடை எண்ணிக்கையைப் பொறுத்தும், நிர்ணயிக்கப்படுகிற ஒன்று இது. இதை அதிகப்படுத்தும் குறிப்பை பின்னால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்மோட்டார்களின் சக்தியை அதிகப்படுத்த மின் பயனீட்டாளர் தானாகவே முன்வந்து வெளியிடும் திட்டம்.

குறுகிய கால வினா எண் (1) * வினா எண். 2008—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் பயன்படுத்தும் மின் மோட்டார்களின் சக்தியை அதிகப்படுத்த மின் பயனீட்டாளர் தானாகவே முன்வந்து வெளியிடும் திட்டம் (Voluntary Disclosure Scheme) ஒன்றை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?